
# திராவிடத்தால் வாழ்கிறோம்

909

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

20

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.





# திராவிடக் கொள்கைபுரம்!

விடுதலைபுரத்தில் 35 குடியிருப்புகளுடன் சேர்த்து, பெரியார் சிலை ஒன்றையும் நிறுவினார் தங்கவேலன். இரண்டையும் திறந்துவைக்க கலைஞர் வர வேண்டுமென்ற தங்கவேலனின் விருப்பத்தைத் தவிடுபொடியாக்கியது நெருக்கடி நிலை காலம். அதனால், பெரியார் சிலையைத் திறக்காமலேயே மூடிவைத்துவிட்டார் தங்கவேலன். குடியிருப்புகள் மட்டும், அதிகாரிகளைக் கொண்டே திறக்கப்பட்டன. அடுத்து அமைந்த எம்.ஜி.ஆர். ஆட்சியிலும் பெரியார் சிலை அப்படியே மூடியே இருந்தது.

கடைசியில், 1994-ஆம் ஆண்டு கே.என். நேரு முன்னிலையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுதலைபுரத்திற்குச் சென்று பெரியார் சிலையைத் திறந்துவைத்தார். அருகே உள்ள காணக்கிளியநல்லூர்தான் கே.என்.நேருவின் சொந்த ஊர்.

பெரியார் சிலை திறக்கப்பட்ட அடுத்த ஆண்டே, தங்கவேலன் மறைந்துவிட்டார். ஒரு ஊரையே நிறுவி, அந்த ஊர் சாதி- மத பேதங்களுக்கு இடமில்லாமல் சமத்துவத்துடன், இப்படித்தான் இருக்க வேண்டுமென்று அவர் வகுத்துத் தந்த கொள்கைகளால் தங்கவேலனைத் தங்களோடு வைத்துக்கொள்ள முடிவெடுத்த கிராம மக்கள், ஊருக்கு மத்தியில் உள்ள 4 கிராமங்களுக்கான இணைப்புச் சாலையிலேயே அவரை அடக்கம் செய்து, நினைவிடமும் எழுப்பினர். நீங்காத அவர் நினைவுகளைச் சுமந்துகொண்டே, இன்றைக்கும் அவர் வகுத்துத் தந்த கொள்கைகளை இம்மியளவும் மாறாமல் கடைபிடிக்கிறது விடுதலைபுரம் கிராமம்.

எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டிற்கு, பொருளாதார அளவுகோலை திணித்தபோது, தி.மு.க., திராவிடர் கழகம் முன்னெடுத்த போராட்டங்களில் பங்கெடுத்து, விடுதலைபுரத்தைச் சேர்ந்தவர்கள் சிறைக்குச் சென்ற வரலாறும் உண்டு.

2 வீடுகள் மட்டுமே இருந்த அந்த ஒற்றையடிப் பாதை கொண்ட காடு, இப்போது சுமார் 100 வீடுகளை கொண்ட கிராமம் ஆகிவிட்டது. அதுவும் தங்கவேலன் விரும்பியதைப் போலவே அனைத்து சாதி-மதத்தினரும் ஒன்றாகக் கூடி வாழும் சமத்துவபுரமாக உருவாகியிருக்கிறது. இன்றும் அங்கு கோயில் கிடையாது, மசூதி கிடையாது, தேவாலயம் கிடையாது. ஊரில் யார் வீட்டுத் திருமணம் என்றாலும், ஊரே கூடி கொண்டாடும். துக்க நிகழ்வு என்றால், பட்டாசு வெடிப்பதோ, குடிப்பதோ அறவே கிடையாது. மௌனமாக அடக்கம் செய்துவிட்டு, துயரில் ஊரே பங்கெடுக்கும். பொங்கலும், பெரியார் பிறந்தநாளும்தான் அவர்களுக்குத் திருவிழா. ஊரை நிறுவிய தங்கவேலனாரையும் அவர் நினைவுநாள், பிறந்தநாளில் நன்றியோடு நினைவுகூருகின்றனர்.

பெரியாரால் தொடங்கிவைக்கப்பட்டு, கலைஞரால் கட்டியெழுப்பப்பட்ட ‘விடுதலைபுரம்’ கிராமம், சமத்துவபுரங்களுக்கு முன்னோடி மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும் முன்மாதிரி கிராமமாகவும் வரலாற்றைச் சுமந்துள்ளது.

...பயணிப்போம்.

> ஓர் ஊரை நிறுவி, சமத்துவபுரமாக அதைக் கட்டியெழுப்பிய வேளையில், எனது தந்தை தங்கவேலனார் திராவிடர் கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதையும் கடமையாகவே கொண்டிருந்தார். பெரியார் தொடர்பாக நூற்றுக்கணக்கான பாடல்களை எழுதிப் பாடியுள்ளார். மதுரை, சேலம், கோவை என பல ஊர்களுக்கும் சென்று இயக்க மேடைகளில் பாடியுள்ளார். அந்தப் பணிகளுக்காகவே பெரியார் நூற்றாண்டில் ஆசிரியர் கி.வீரமணி அவர்களால் ‘பெரியாரின் பெருந்தொண்டர்’ என்ற விருதைப் பெற்றார். ‘பேச்சிசை தங்கவேலனார்’ என்றும் புகழப்பட்டார். திருச்சி பெரியார் மாளிகையின் முன்பக்க பூங்காவுக்கும் ‘விடுதலைபுரம் தங்கவேலன் நினைவுப் பூங்கா’ என பெயர் சூட்டியது திராவிடர் கழகம்.



த.விடுதலை மன்னன்

---

## குஜராத்தின் ஊழல் மாடல்!

குஜராத் மாநில வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டதாகக் கூறி, போலி விண்ணப்பங்கள் மூலம், அரசுக் கருவூலத்தில் நடந்துள்ள 2 கோடி ரூபாய் ஊழல் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. குஜராத்தின் பரூச் மாவட்டத்தில், சில அறக்கட்டளைகள் மூலம் 1,906 வீடுகளில் கழிப்பறைகளைக் கட்டியுள்ளதாக நகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது. ஆனால், அங்கு கழிப்பறைகளே கட்டப்படவில்லை என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் அம்பலம் ஆகியுள்ளதாக ஓய்வுபெற்ற பள்ளி ஆசிரியர் பிரவீன் மோடி என்பவர் புகார் அளித்துள்ளார். அங்குள்ள அங்கலேஷ்வர் நகராட்சியில் திருமணச் சான்றிதழ்களைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆதார் உள்ளிட்ட ஆவணங்கள் கழிப்பறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டிற்காக விண்ணப்பிக்கப் பயன்படுத்தியுள்ளனர்.

கடந்த ஓராண்டில் மட்டும் குஜராத்தில் இதுபோல பல்வேறு ஊழல்கள், முறைகேடுகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. சூரத் மற்றும் தாபி மாவட்டங்களில் உள்ள 25 கூட்டுறவு சங்கங்கள் மகாராஷ்டிராவிலிருந்து பால் வாங்கி, குளிர்விக்கும் ஆலைகளில் சேமித்து, பதிவு செய்யப்படாத மையங்கள் மூலம் பால் நிறுவனங்களுக்கு அனுப்புவதாக, கடந்த மாதம் சர்ச்சை கிளம்பியது. அத்தகைய முறைகேடான செயல்களில் ஈடுபட்ட சங்கங்களுக்கு 3.25 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

குஜராத்தில் நிலக்கடலை கொள்முதலில் ஊழல் நடந்ததாக அம்ரேலியைச் சேர்ந்த பாரத் கனபார் என்பவர் பிப்ரவரி மாதத்தில் குற்றம்சாட்டினார். இடைத்தரகர்கள் லாபம் ஈட்டும் வகையில், சந்தை விலையைக் காட்டிலும் கூடுதல் விலை நிர்ணயிக்கப்பட்டதாக அவர் குற்றம்சாட்டினார். இவர் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர் என்பதும் கூடுதல் தகவல். இதுபோல எண்ணற்ற ஊழல் குற்றச்சாட்டுகள் குஜராத் மாடலில் வந்துகொண்டே இருக்கின்றன. அமலாக்கத் துறையோ, வருமானத்துறையோ, சி.பி.ஐ.யோ தப்பித்தவறிகூட குஜராத் பக்கம் எட்டிப்பார்ப்பதில்லை என்ற விமர்சனங்களும் எழுந்துள்ளன. ஒவ்வொன்றிலும் ஊழலும், போலித்தனமுமே... மிஞ்சுகின்றன. இதற்குப் பெயர்தான் குஜராத் மாடலா?

---

## ப்ளாஷ்பேக்



தேவி கமல்



### தலைவரைச் சந்திக்கையில் உலகமே மறந்தது!

2016 ஜனவரி மாதம் 10 தேதி தானைத் தலைவர், ஓய்வறியாச் சூரியனைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது.மாலை 5:30 க்கு நேரம் சொல்லியிருந்தார்கள். நான் ஆர்வத்தில் 3 மணிக்கே சென்று விட்டேன். மஞ்சள் துண்டும் கருப்பு கண்ணாடியுமாக கம்பீரமான தோற்றத்தில் இருந்த தலைவரைக் கண்டதும்,எனக்கு உலகமே மறந்தது. எல்லோரையும் அறிமுகப்படுத்துகையில், நக்கீரன் ஆசிரியர் கோவி.லெனின் மனைவி பிரதிபாவை அறிமுகம் செய்கையில், "அய்யா இவங்க கோவி.லெனின் வொய்ப்னு" சொன்னாங்க. "அவங்க மனைவியா இவங்கனு" தலைவர் திரும்பக் கேட்டார். "ஆமா அவரோட வொய்ப் நான்னு" பிரதிபா சொல்ல, "மனைவினாலும் வொய்ப்னாலும் ஒண்ணுதானே, இல்ல வேற வேறயானு" அவருக்கே உரிய ‘டைமிங்’ அந்த இடத்தைக் கலகலப்பாக்கியது. அவர் கையெழுத்திட்டு தந்த நூலும் பேனாவும் வாழ்நாள் பெட்டகம்.

– தேவி கமல்,
187 வட்டத் துணைச் செயலாளர்,
மடிப்பாக்கம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

70

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

படம் உதவி : ஞானம்



# அடிவருடிக் கூட்டத்தின் ஆலாபனை!

**கொலை செய்வதும், கொள்ளை அடிப்பதும், கற்பழிப்பதும் ஒரு கலை என்றும், அதைச் செய்கின்ற நான் கலைஞன் என்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ‘மந்திரி குமாரி’ படத்தில் வசனம் எழுதியதாக சமூக வலைதளங்களில் ஒரு க்ளிப் பரப்பப்படுகிறதே?**

திராவிட எதிர்ப்பு என்ற பெயரில், ஆரியத்தின் அடிவருடிகளாக இருப்பவர்களுக்கு அந்நாள் முதல் இந்நாள் வரை ‘மந்திரிகுமாரி’ படத்தின் வசனங்கள் என்றால் எரியும். அதை திரிபுவாதம் செய்து பார்த்து, அப்போது தோற்றுப்போனவர்களின் வழிவந்தவர்கள், முனைமழுங்கிய துருப்பிடித்த கத்தியுடன் இப்போதும் முயற்சி செய்து பார்க்கிறார்கள். ‘மந்திரிகுமாரி’ படத்தை யூ-டியூப்பில் பார்க்க முடியும். ஆரியம் எப்படி ஆதிக்கம் செலுத்துகிறது என்பதை ‘மந்திரிகுமாரி’யில் கலைஞர் தோலுரித்துக் காட்டியிருப்பார்.

படத்தில், மரணதண்டனை விதிக்கப்பட்ட கொள்ளைக்காரனான எதிர்நாயகன், சிறையில் தன்னை சந்திக்கும் தந்தையான ராஜகுருவிடம் பேசும்போது, “தொழிலா அது, என் கலை அப்பா.. கலை. அந்தக் கலையை நான் விட முடியாது. புலி ஆட்டைக் கொல்லாமல் இருந்தால், கொக்கு மீனைக் கொத்தாமல் இருந்தால்.. பாம்பு தவளையை விழுங்காமல் இருந்தால், நானும் கொள்ளையடிக்காமல் இருக்கலாம்” என்று சொல்வான். அவன் எங்கேயும் தன்னை கலைஞன் என்றோ, கற்பழிப்பது கலை என்றோ சொல்லியிருக்க மாட்டான். ஒரு வேலை, முத்தமிழறிஞர் கலைஞரை இழிவு செய்ய நினைப்பவரின் கலையாக அது இருக்கக்கூடும்.

ஒரு கதாபாத்திரம், அதுவும் மோசமான குணங்களைக் கொண்ட கதாபாத்திரம், படத்தில் பேசுகிற வசனத்தை முன்வைத்து, கலைஞரை இழிவு செய்து விடலாம் என நினைக்கிறார்களென்றால், இவர்கள் எவ்வளவு பெரிய அடி முட்டாள்கள் அல்லது யாருக்கோ அடிமைகள் என்பது புரிகிறதா? படத்தில் ராஜகுருவாக இருப்பவர், பிராமண சமூகத்தவராகக் காட்டப்பட்டிருப்பார். அச்சு அசலாக சாணக்கியன் போன்ற ஒப்பனை. அரச சபையில் ராஜாவைவிட அதிகாரம் கொண்ட ராஜகுருவின் மகன்தான் கொலை பாதகக் கொள்ளைக்காரன். இப்படியொரு திரைக்கதை அமைத்து, அதற்கு வசனம் எழுதக்கூடிய துணிச்சல் கலைஞருக்குத்தான் உண்டு. ஆரியத்தின் ஆதிக்கக் கொட்டத்தை அம்பலப்படுத்தி, அதை மக்களின் ஆதரவுடன் முறியடிக்கும் ‘தளபதி’யின் கதைதான் மந்திரிகுமாரி.

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பில் 1950-இல் வெளியான ‘மந்திரிகுமாரி’, 75 ஆண்டுகள் கழித்தும் ஆரிய அடிமைகளை அலற வைக்கிறது. திரித்துப் பேசி இழிவுபடுத்தி விடலாம் என நினைக்கிறது. அதே படத்தில், அதே கொள்ளைக்காரன் கதாபாத்திரம் பேசுகிற ஒரு வசனம் அந்தக் காலத்தின் பஞ்ச் டயலாக். கலைஞரை இழிவுபடுத்தலாம் என நினைக்கும் யாராக இருந்தாலும், அவர்களை நோக்கி அந்த டயலாக்கை சொல்லலாம், ‘அரண்மனை நாயே... அடக்கடா வாயை’.

...வினா தொடரும்.

> “‘மந்திரிகுமாரி’, 75 ஆண்டுகள் கழித்தும் ஆரிய அடிமைகளை அலற வைக்கிறது. திரித்துப் பேசி இழிவுபடுத்திவிடலாம் என நினைக்கிறது.”

---

## நலதுரு (கருவூலம்)

### நிலச்சீர்திருத்த அறிக்கை!

17.6.1960 அன்று தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் சேலம் மாவட்டம், குமாரபாளையத்தில் நடைபெற்றது. அதையடுத்து 18.06.1960, 19.6.1960 ஆகிய இரு நாட்களும் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. வடவர் ஏகாதிபத்திய அரசு, இந்தியைத் திணிப்பதை கழகம் எதிர்த்து முறியடிக்க வேண்டும் என அந்தப் பொதுக்குழு முடிவு செய்தது. தி.மு.க. அமைத்த நிலச்சீர்திருத்தக் குழுவின் அறிக்கை, பொதுக்குழுவில் அளிக்கப்பட்டது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.